2021 செப்டம்பர் 2]

15—

விளையாட்டு மைதானம்

***1813—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் வருவாய் வட்டம் வாரியாக விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதியில் வருவாய் வட்டம் வாரியாக விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் பாசறையில் வளர்ந்து, அண்ணாவின் தம்பியாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிவந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.*

இன்றைய சூழ்நிலையில், மாணவ, மாணவிகள், சிறுவர்கள், சிறுமிகள் மற்றும் இளைஞர்கள் அனைவரும் cell phone, WhatsApp, Facebook, Twitter *மற்றும் இதர விளையாட்டுகள் வாயிலாகவே தங்களின் பொழுதினைக் கழிப்பதாக உள்ளனர். இதனால் விளையாட்டுகளில் ஆர்வம் குறைந்து, உடல் ஆரோக்கியமற்ற வாழ்க்கையை வாழுகின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. விளையாட்டுத் துறையினை மேம்படுத்த, மாண்புமிகு தமிழக*

முதலமைச்சர் அவர்கள் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் விளையாட்டுத் துறையின் சார்பில், தலா ரூ.3 கோடி செலவில் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். எனது தொகுதியில் வருவாய் வட்டம் வாரியாக விளையாட்டு அரங்கங்களை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து விளையாட்டுத் துறைக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்தது, தமிழக மக்களிடத்தில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றதோடு, தமிழகத்தில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஒரு புதிய உற்சாகத்தைத் தந்திருக்கிறது. அந்த அடிப்படையில் Olympic போட்டியில் பங்குபெறுகின்ற விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையில், அவர்கள் போட்டிக்குச் செல்வதற்கு முன்பாகவே 5 இலட்சம் ரூபாய் வழங்கி அந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவித்த (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர், நம்முடைய முதலமைச்சர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறுகின்ற அந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை உற்சாகப்படுத்துகிற வகையில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், அவர்கள் தங்கப் பதக்கம் வென்றால், 3 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி), வெள்ளிப் பதக்கம் வென்றால், 2 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி), வெண்கலப் பதக்கம் வென்றால், 1 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்படும் என்று அறிவித்த முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த அடிப்படையில், இரண்டு தினங்களுக்கு முன்பாக Tokyo Paralympics போட்டியில் தமிழகத்தைச் சார்ந்த மாரியப்பன் தங்கவேல் அவர்கள் வெள்ளிப் பதக்கம் வென்றவுடனேயே

2021 செப்டம்பர் 2]

இரண்டு கோடி ரூபாய் அறிவித்த முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் பெரும் மரியாதையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு விளையாட்டுக் கட்டமைப்புகளை உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பாக உருவாக்குவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடைமுறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். விளையாட்டு வீரர்களுக்கு இங்கு இருக்கிற பயிற்சியாளர்களைத் தவிர, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற சிறந்த பயிற்சியாளர்களை வரவழைத்து, அவர்களை நியமித்து, பயிற்சி வழங்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலும், மாவட்டத்தினுடைய தலைநகரங்களில் எங்கெல்லாம் மாவட்ட விளையாட்டு அரங்கம் இல்லையோ, அந்த இடங்களிலெல்லாம் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், ஓர் உள் விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம் என அனைத்து வசதிகளோடு விளையாட்டு மைதானங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில், அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டதற்குப் பின்பு, மாவட்டத்தினுடைய இதர பகுதிகளிலும், நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்காக விளையாட்டுத் துறையின் மூலமாக அவர்களின் கவனத்தை ஈர்த்து அவர்களுக்கு ஆரோக்கியமான உடல் தகுதியை வழங்குவதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமப் பகுதிகளிலும் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும் என்கின்ற அறிவுரையை எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி; திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலைப் பகுதியிலே, ஓர் ஏக்கர் பரப்பளவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்காக, ரூபாய் 4 கோடியே, 77 இலட்சம் நிதியை (மேசையைத் தட்டும் ஒலி) வழங்க ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். விரைவில் tender *விடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது என்ற நல்ல செய்தியைச் சொல்லி, தமிழகம் விளையாட்டுத் துறையில் இனி நிமிர்ந்து நிற்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது, ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டதாகும். எனவே, பல்வேறு தனித் திறமைகளைக் கொண்ட சிறுவர், சிறுமியர்கள், இளைஞர்கள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி சாதனை புரிந்தி ஏதுவாக, திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு, மாவட்டத் தலைநகரில், நீங்கள், புதியதாக அமைக்கவிருக்கின்ற விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டு, அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டமானது, 15–8–2019 அன்று புதியதாக உருவாக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருப்பத்தூர் மாவட்ட அளவில் ஒரு விளையாட்டு அரங்கம் கேட்டிருக்கிறார்கள். அந்த மாவட்ட அளவில் அமையவிருக்கின்ற விளையாட்டு அரங்கத்திற்குத் தேவையான இடம் உள்ளாட்சித் துறையிலோ அல்லது வருவாய்த் துறையிலோ கண்டறியப்பட்டு, தேர்வு செய்து வழங்கப்பட்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, புதிய மாவட்ட விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]